**<u>2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,</u>**
**<u>திருவள்ளூர் @ பூந்தமல்லி</u>**

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**<u>இ.ஏ.எண்.1/2025 ன் இ.பி. எண்.112/2018</u>**

1. குணாளன் (இறந்தவர்)

2. சுரேஷ் குமார்

3. செந்தில் குமார்

4. தினேஷ் குமார்

... மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள்

..எதிர்..

S. செல்வம்

...எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர்

இந்த மனுவானது 02.01.2026 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள் தரப்பில் திரு. K. குமரேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. K. பலராமன் நாயுடு அவர்கள் ஆகியோர் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

G
BHUVANESWARI

Digitally signed
by G
BHUVANESWARI
Date: 2026.01.23
22:18:55 +0530

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள் தரப்பில் காலவரையறை சட்டம் பிரிவு 5 உ/இ உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் 11.03.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய உரிய காலத்தில் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2101 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் வழக்கில் குறிப்பிடப்பட்ட சொத்தில் மனுதாரர்களின் 1/36 பங்கிற்கான விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றக் கேட்டு நி.ம. எண்.112/2018 ஐ தாக்கல் செய்துள்ளார். அதில் 11.03.2019 அன்று, மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விசாரணைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள், தங்களது முன்னாள் வழக்குரைஞரின் புறக்கணிப்பு காரணமாக, அசல் வழக்கின் தீர்ப்பு மற்றும் நிறைவேற்று மனு பற்றி அறிந்திருக்கவில்லை. மேலும், தங்கள் தந்தை 13.02.2018 அன்று இறந்துள்ளார். அவரது மரணம் நீதிமன்றத்தின் அறிவுக்கு கொண்டு வரப்படாத போதிலும், இறந்தவர் மீதும் வழக்கு விசாரணையின்றி (ex–parte) உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மனுதாரர்கள் இந்த நிறைவேற்று மனுவை 06.01.2025 அன்று தான் அறிந்துகொண்டனர். எனவே, ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரும் மனுவை உரிய காலத்தில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2101 நாட்களின் தாமதத்தை மன்னிக்க வேண்டும். இந்த தாமதம்

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:01 +0530

வேண்டுமென்றே செய்யப்பட்டது அல்ல, மேலும் இக்கோரிக்கையை நிராகரிப்பது சீரமைக்க முடியாத கடினத்தை ஏற்படுத்தும் எனவே 11.03.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய உரிய காலத்தில் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2101 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று கோரப்படுகிறது.

3. <u>எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:–

இந்த மனு அற்பமானது மற்றும் சட்டப்படியோ அல்லது உண்மைகளின் அடிப்படையிலோ நிலைநிறுத்த முடியாதது. அசல் வழக்கு, நிரந்தர தடை உத்தரவை உள்ளடக்கிய விளைவு நிவாரணங்களுடன் கூடிய குறிப்பிட்ட நிறைவேற்றத்திற்கானது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர்கள், வழக்கு நிலுவையில் இருப்பதை அறிந்திருந்தனர், ஏனெனில் அவர்கள் வழக்குரைஞரை நியமித்திருந்தனர். எனவே, தங்கள் சொந்த செயலற்ற தன்மைக்காக தங்கள் வழக்குரைஞர் மீது பழியை மாற்ற முடியாது. மனுதாரர்கள், நிறைவேற்று மனு நடவடிக்கைகளை சமீபத்தில் தான் அறிந்ததாக உள்ள கூற்றை எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் மறுக்கிறார். இ.பி. வழக்கு 2018 முதல் நிலுவையில் இருந்து வருகிறது. 2025 இல் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தாமதமானது. மேலும், 2101 நாட்கள் தாமதத்திற்கு திருப்திகரமான விளக்கம் எதுவும் கொடுக்கப்படாததால், இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:07 +0530

4. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

5. இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>பிரச்சனை:–</u>

இருதரப்பு வாதங்களையும் பொருத்து வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது மனுதாரர்கள் அசல் நிறைவேற்று மனுவில் தீர்ப்புக் கடனாளிகள் ஆவர். எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் வழக்கு அட்டவணை சொத்துக்கான விற்பனைப் பத்திரத்தை, தனது பேரில் நிறைவேற்றி பதிவு செய்யுமாறு தீர்ப்புக் கடனாளிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று தாக்கல் செய்துள்ள அசல் நிறைவேற்று மனுவானது விசாரணைக்காக நிலுவையில் உள்ளது. இந்நிலையில் மனுதாரர்கள் / தீர்ப்புக் கடனாளிகள் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்து மனுதாரர்கள், தங்களது முன்னாள் வழக்குரைஞரின் புறக்கணிப்பு காரணமாக, அசல் வழக்கு தீர்ப்பு மற்றும் நிறைவேற்று மனு பற்றி அறிந்திருக்கவில்லை என்றும் தங்களது தந்தை 13.02.2018 அன்று இறந்துவிட்டதாகவும், அவரது மரணம் நீதிமன்றத்தின் அறிவுக்கு கொண்டு வரப்படாத போதிலும், இறந்தவர் மீதும் வழக்கு விசாரணையின்றி (ex–parte) உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர்கள் இந்த நிறைவேற்று மனுவை 06.01.2025 அன்று தான் அறிந்துகொண்டனர் என்றும் எனவே, 11.03.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய உரிய காலத்தில் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 2101 நாட்கள்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:12 +0530

காலதாமதத்தை மன்னித்து இம்மனுவை அனுமதிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்படும் மனுதாரர்கள், வழக்கு நிலுவையில் இருப்பதை அறிந்திருந்ததாகவும், அவர்கள் வழக்குரைஞுரையும் நியமித்திருந்தனர் என்றும் எனவே, தங்கள் சொந்த செயலற்ற தன்மைக்காக தங்கள் வழக்குரைஞர் மீது பழியை மாற்ற முடியாது என்றும் மனுதாரர்களின், நடவடிக்கைகளை சமீபத்தில் தான் அறிந்ததாக உள்ள கூற்று தவறானது என்றும் நிறைவேற்று மனு 2018 முதல் நிலுவையில் இருப்பதாகவும், 2025 இல் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு தாமதமானது மற்றும் நிலைநிறுத்த முடியாதது என்றும் 2101 நாட்கள் தாமதத்திற்கு திருப்திகரமான விளக்கம் எதுவும் கொடுக்கப்படவில்லை எனறும் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் ஏற்கத்தக்கவையாக உள்ளன என்றும் மனுதாரர்கள் தரப்பில் 2101 நாட்கள் தாமதத்திற்கான எவ்வித காரணங்களும் குறிப்பாக கூறப்படவோ விளக்கப்படவோ இல்லை என்கிற நிலையிலும் அசல் நிறைவேற்று மனுவானது 8 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் இருந்து வரும் நிலையிலும் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடுகிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:17 +0530

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:22 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2026.01.23 22:19:26 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**வரைவு/தெளிவு உத்தரவு**
**<u>இ.ஏ.எண்.1/2025 ன்</u>**
**<u>இ.பி. எண்.112/2018</u>**
**நாள் 20.01.2026**
**2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.**